ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1942/14 - 2015 නොවැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2015.11.24
1942/14 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கட்டளை இல. 35**

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரச சபைச் சட்டம்**

20 (5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 20 (5) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, உற்பத்தியாளர், இறக்குமதியாளர், பொதியிடுவோர், விநியோகத்தர் அல்லது வியாபாரி எவரும் கீழே தரப்பட்டுள்ள ஆகக் கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேலாக பின்வரும் பொருட்களை விற்பனை செய்யவோ விற்பனைக்கு விடவோ, விற்பனைக்கு கோரவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாதென கட்டளையிடுகின்றது.

| பொருட்கள் | ஆகக்கூடிய சில்லறை விலை | |
|---|---|---|
| உலர்த்திய நெத்தலி கருவாடு | 410.00 ரூபா | கி. கிராம் |
| பருப்பு | 169.00 ரூபா | கி. கிராம் |
| "கட்டா" கருவாடு | 1,100.00 ரூபா | கி. கிராம் |
| "சாலய" கருவாடு | 425.00 ரூபா | கி. கிராம் |
| கடலை | 169.00 ரூபா | கி. கிராம் |
| பால் மா உள்ளூர் உற்பத்தி | 295.00 ரூபா | 400 கிராம் பொதி |

பாவனையாளர் அதிகாரசபையால் 2015, மாச்சு மாதம் 19 ஆந் திகதிய, 1906/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை இல. 32 இல், குறிப்பிடப்பட்ட "உலர்த்திய நெத்தலிக் கருவாடு (இறற்குமதி செய்யப்பட்டது), "(பொதி செய்யப்படாதது)" மற்றும் 2015, யூலை மாதம் 27 ஆந் திகதிய 1925/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை இல. 34 இல் குறிப்பிடப்பட்ட "உலர்த்திய நெத்தலிக் கருவாடு (இறக்குமதி செய்யப்பட்டது) (பொதி செய்யப்பட்டது)" என்பன இக்கட்டளை மூலம் இரத்துச் செய்யப்படுகின்றன.

இக்கட்டளை 2015, நவெம்பர் 24 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

கசித்த திலகரட்ன,
பதில் தவிசாளர்.

கொழும்பு,
2015, நவெம்பர் 24.

12-355

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.